முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் குலசேகர ஆழ்வார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

18.01.2019, வெள்ளிக்கிழமை

1. **தருமராசனே தலைவா போற்றி**
   **தவராசனே அரங்கா போற்றி**
   **பெருமைமிக்க ஞானயுகத்தை**
   **பேதமற படைக்க வந்த ஞானியே**
2. ஞானியே உன் பெருமை கூறியே
   ஞாலமதில் ஒளி சூட்சும நூலை
   இனிமைபட **விளம்பி கலை திங்கள்**
   **இயம்பிட சதுர்திகதி புகர் வாரம்**
   **(விளம்பி வருடம் தை மாதம் 4ம் நாள் 18.01.2019, வெள்ளிக்கிழமை)**
3. **வாரமதில் குலசேகர ஆழ்வார் யானும்**
   வழங்கிடுவேன் உலகோர் நலம்பெற
   தாராள மனநிலை பெருகவே
   தயவு கூட்டிட வழிகாட்டி அருளும்
4. அருளும் துறையூர் எல்லை வாழ்
   ஆறுமுக அரங்கமகா ஞானி
   அருளும் ஞான உபதேசங்களை
   அகிலத்தார் ஏற்று வருதல் காண
5. காணவே அரங்கன் காட்டுகின்ற
   கருணைமிக்க தரும நெறிகளையும்
   ஞான நெறியாக ஏற்று வருக
   நம்பகம்பட தருமம் வளர்க்கவே
6. வளர்க்கவே எல்லா திக்கிலும்
   வறுமை கஷ்டம் பசிபிணி விலகும்
   வளர்க்கவே எங்கும் தருமபலம்
   வளர்ந்து மக்களிடை சமநிலை
7. சமநிலை சமதர்மம் ஆக உயர்ந்து
   சமத்துவம் சமாதானம் சிறந்து
   நேமமுடன் கலியுகம் தேறும்
   நிலவுலகே ஞானவான் தலைமையில்
8. தலைமையில் தரும ஆட்சியும்
   தரணியையே மாற்றும் ஞான ஆட்சியுமாக
   வளமுற பலமுற சக்தி கூடியே
   வையகமே சிறப்பு காண்கும்
9. காண்கவே நடப்பில் ஆளுமை
   கண்டுவரும் தலைமை மக்களே
   சண்முகனாரின் உண்மை ஆன்மீகம்
   சரவண சோதி வழிபாட்டுக்கு வந்து

10. வந்துமே அரங்க ஞானியரிடம்
வரம் பெற்று வருதல் காண
சிந்தைதனில் தருமபலம் பெருக்கி
சிறப்பான வழிபாடு செய்துமே

11. செய்துமே முருகன் ஆளுமைக்கு
சிறப்பான சூழல் பெருக்கி வர
மெய்ஞான உலகம் ஆகியே
முருகனாரின் ஞான ஆட்சி மலரும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் குலசேகர ஆழ்வார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

எல்லையில்லாது தர்மங்களை செய்து செய்து தர்மத்தின் தலைவனாக ஆகிவிட்ட தருமராசனே அரங்கமகா தேசிகனே போற்றி போற்றி. அநேகம் அநேகம் தவங்களை செய்து வெற்றி கண்டிட்ட தவராசனே அரங்கா போற்றி போற்றி. பேதாபேதங்களை நீக்கி உலகினில் பெருமைமிக்க ஞானயுகத்தினை படைக்கவே வந்துதித்த மகா ஞானியே அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலன் கருதி **விளம்பி வருடம் தை மாதம் 4ம் நாள் 18.01.2019, வெள்ளிக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே குலசேகர ஆழ்வார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் குலசேகர ஆழ்வார்.

உலகினில் உள்ள மக்களின் லோபித்தனம் நீங்கி தாராள மனப்பான்மை பெருகி உலகினில் தயவினை பெருக்கி வாழ வழிகாட்டி அருள் செய்து காக்கின்ற மகா ஞானி ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடில் வாழும் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஞான உபதேசங்களை உலக மக்களெல்லாம் ஏற்றுக் கொண்டு அரங்கன் காட்டுகின்ற கருணைமிக்க தருமநெறிகளையும் ஞானநெறியாக ஏற்று வருவதுடன் அரங்கன் மீது முழுநம்பிக்கை வைத்து தர்த்தின் மீது நம்பிக்கை வைத்து தருமத்தினை வளர்த்து வர வேண்டும்.

உலகினில் தரும பலம் பெருக பெருக உலகின் எல்லாத்திக்கிலும் உள்ள கஷ்டங்களும் வறுமையும் பசிப்பிணியும் விலகி ஓடும். தருமபலம் உலகினில் வளர்ந்து ஓங்கிட உலக மக்களிடையே உள்ள பேதாபேதங்கள் எல்லாம் விலகி உலக மக்களிடையே சமநிலை பெருகி சமதர்மமாக உயர்ந்து உலகமெங்கும் சமத்துவமும் சமாதானமும் சிறந்து ஓங்கி துன்பம்போக்கி கலியுகமும் தேறிடுமப்பா. இந்த புவியே ஞானவான் முருகப்பெருமான் தலைமையில் தரும ஆட்சி உண்டாகி இந்த உலகையே மாற்றிடும் ஞான ஆட்சியுமாக வளம்பல பெற்று, பலம்பல பெற்று அளவிலாத சக்திகள் பெருகி இந்த உலகமே சர்வசிறப்புகளை காணுமப்பா.

தற்காலம் உலகின் நாடுகளை ஆட்சி செய்து வருகின்ற தலைமை பொறுப்பில் உள்ள மக்களே முருகப்பெருமானின் உண்மை ஆன்மீக வழிபாடான சரவணஜோதி வழிபாட்டிற்கு வந்து அரங்கமகா தேசிக ஞானியரிடம் வரம் பெற்று வரவர, அவரவரும் சிந்தையிலே தர்மபலத்தை பெருக்கி தர்மசிந்தையோடு நடந்து தர்மங்களை தாராளமாய் செய்து சிறப்புமிக்க சரவணஜோதி வழிபாட்டினை செய்து வருவதுடன் சிறப்புமிக்க ஞானத்தலைவன் முருகப்பெருமானின் ஞானஆட்சிக்கு ஏற்றோராய் வந்திடல் வேண்டும்.

உலகினில் முருகப்பெருமானின் ஆளுமைக்கு உண்டான சூழ்நிலைகள் மிகச் சிறப்பாக உலகினில் பெருகி வருகுதப்பா, சூழ்நிலை பெருகி வரவர இவ்வுலகம் மெய்ஞான உலகமாக ஆகியே முருகப்பெருமானின் ஞானஆட்சி இனி உலகினில் மலரும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் குலசேகர ஆழ்வார்.

–சுபம்–